**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI**

**Deposition of Witnesses for P.W.1 in MCOP.No. 62/2023**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமிகு.ராசு (எ) ராஜேந்திரன் | தந்தை பெயர் | : திருமிகு.மாரிமுத்து |
| கிராமம் | : | வட்டம் | : |
| வயது | : | மாவட்டம் | : |

Solemnly affirmed accordance with the provisions of the Act of 1973 of the day of 17.12.2024.

**முதல்விசாரணை**

நான் எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளக்கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படி விபத்திற்காக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை கைநகல் ம.சா.ஆ.1.

எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருச்சி GVN மருத்துவமனையிலிருந்து எனக்கு வழங்கப்பட்ட மருத்துவ தகவல் படிவம் ம.சா.ஆ.2.

மேற்படி மருத்துவமனையிலிருந்து நான் 14.11.2022 தேதியில் விடுவிக்கப்பட்டதை காட்டக்கூடிய விடுவிப்பு அறிக்கை ம.சா.ஆ.3.

எனக்கெதிராக விபத்தை ஏற்படுத்திய வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த காப்பீடு ம.சா.ஆ.4.

திருச்சி GVN மருத்துவமனையில் நான் 08.11.2022 தேதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதில் இருந்து 14.11.2022 தேதியில் விடுவிக்கப்பட்டது வரை எனக்கு வழங்கப்பட்ட சிகிச்சைக்கான மொத்த பணத்தொகைக்கான ரசீது ம.சா.ஆ.5.

மேற்படி விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் அறிக்கை ம.சா.ஆ.6.

நான் பராமரித்து வரும் வங்கி கணக்கிற்குரிய பாஸ் புத்தகத்தின் ஒப்புநோக்கப்பட்ட நகல் ம.சா.ஆ.7.

எனது ஆதார் அடையாள அட்டையின் ஒப்பு நோக்கப்பட்ட நகல் ம.சா.ஆ.8.

மேற்படி விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கான காயச்சான்றிதழ் ம.சா.ஆ.9.

நான் விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக வெளிநோயாளியாக இருந்து மருந்துகள் எடுத்துக்கொண்ட வகையில் எனக்கு வழங்கப்பட்ட பணரசீதுகள் ம.சா.ஆ.10.

Sd/– ராசு (எ) ராஜேந்திரன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.